<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 40/2020

Deposition of Witness : PW 2

| | |
|---|---|
| Name | : குமரவேல் |
| Father's Name /W/o | : த/பெ கிருஷ்டப்ப ரெட்டியார் |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : நாகவேடு |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 22.08.2024.

<u>குறுக்கு விசாரணை 11 வது பிரதிவாதி தரப்பில்</u>

1. யார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் முருகன் தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம்கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் ஏழுமலை மனைவி சுமதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

2. அரசுக்கு எதிராக வழக்கில் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். அரசை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.371/2, 371/3.

3. அ பதிவேட்டில் சர்வே எண்.371/2, 371/3 யின் உரிமையாளரின் பெயர் சரோஜா மற்றும் 3 நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.371/2 யின் விஸ்தீரணம் 1 ஏர்ஸ் என்று குறிப்பிடப்படுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.371/3 யின் விஸ்தீரணம் 59 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. நெமிலி சார்பதிவாளர் அலுவலத்தில் 13.02.2019 தேதியில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.233/2019 தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் ஆவண எண் 453/2019 செல்லாது என்று வழக்கில் பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. இந்த வழக்கில் சார்பதிவாளர், மாவட்ட பதிவாளர், வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். சரியான தரப்பினரை வழக்கில் சேர்க்காதாதால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக முருகன் நெமிலி வட்டாச்சியருக்கு மனு கொடுத்தாரா என்றால் கொடுத்தார். எந்த தேதியில் கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை.

6. வழக்கில் வட்டாச்சியர் வழங்கிய பட்டா செல்லாது என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளதா என்றால் கோரப்பட்டுள்ளது. வட்டாட்சியருக்கு எதிராக வழக்கில் பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் வழக்கு விபரங்கள் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 11 வது பிரதிவாதிக்கு பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை என்றால் சரியல்ல.